[2008 ஏப்ரல் 29

(ஆ) சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாலை விபத்து, மருத்துவமனையில் இறப்பு போன்ற பல்வேறு நேர்வுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து, பாதிக்கப்பட்ட அவர்கள் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று பேரவை விதி 55 மற்றும் 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே, உறுப்பினர்களின் இத்தகைய அறிவிப்புகள்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

மாண்புமிகு முதலமைச்சர்மீது உரிமை மீறல் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 220–ன்கீழ் அடியிற்கண்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை குறித்து பேசுவதற்கு அனுமதி அளிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. பிறகு பார்க்கலாம் (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) No. எல்லோரும் உட்காருங்கள்.